பதிவு எண். M. 8311 ★ தொலைபேசி: 51881 சிறப்பிதழ் ★ விலை 15 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர் : 16] சென்னை : ஆடி 26 (10—8—68) சனி ★ வெளியூர் : ஆடி 27 (11—8—68) ஞாயிறு [இதழ் : 49

புதுடில்லியில் வள்ளுவர் சிலை

சென்னை மாநகராட்சி ரூ. 5,000 நன்கொடை

சென்னை, ஆக. 10—

நேற்று நடைபெற்ற மாநக ராட்சிக் கூட்டத்தில், 'புது டில்லியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு ரூ. 5,000 வழங்குவது' என முடிவுசெய்யப்பட்டது.

டில்லியின் போக்கு—செ. கந்தப்பன் கடும் குற்றச்சாட்டு

மொழி உரிமை கோரிய மசோதா மக்களவையில் நிறைவேருததேன்?

எல்லா மொழிகளிலும் பேசுவது முறைதானு என்பதில் அமைச்சருக்கு ஐயம் ஏற்பட்டுவிட்டதாம்

இரா. செழியன் பதிலளிப்பதற்குமுன் அமைச்சர் வெளியேறிய விசித்திரம்

கொள்கையளவில்கூட மொழி மசோதாவை ஒப்ப இயலாதென மொரார்ஜி தேசாய் மறுப்பு

புதுடில்லி, ஆக. 9—

நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்களால் கொணடுவரப்பட்ட அரசியல் சட்டத் திருத்த மசோதா நிறைவேற வாய்ப்பு இல்லாததாகிவிட்டது.

" அரசியல் சட்டத்தின் 8-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள எல்லா இந்திய மொழிகளிலும் அலுவல்கள் நடத்தவும், எந்த உறுப்பினரும் தமது தாய் மொழியில் நாடாளுமன்றத்தில் பேசவும் உரிமை அளிக்கும்படி அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் " என்பதே இரா. செழியனின் திருத்தமாகும்.

இந்த மசோதா ஓட்டுக்கு விடப்பட்ட நேரத்தில், அரசியல் சட்டத்தில தருத்தம செய்வதற்குத் தேவைப்படும் உறுப்பினர்கள எண்ணிககை அவையில் இல்லாமற் போய் விடடதால், தீர்மானம் நிறைவேறவில்லை.

ஆயினும் இந்த மசோதாவுக்குக் கட்சிப் பாகுபாடின்றி அவையின் எல்வாத் தரப்பிரனரிடமிருந்தும் முழு ஆதரவு கிடைத்திருக்கிறது.

ஓரிரு காங்கிரசார்கூட, 'நாடாளுமன்றத்தில் தத்தம் தாய் மொழியில் பேசுவதற்கு வாய்ப்பளிகக வேண்டும என்பது ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ள உரிமையாகும்' எனறு குறிப்பிட்டு, மசோதாவுககுத் தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

'மசோதாவை ஓட்டுக்கு விடுவதா' என்ற கேள்வி எழுந்தபோது, எல்லா எதிர்க் கட்சியினரும் இதை ஆதரிததபோதிலும் காங்கிரசுக கட்சியினர் மட்டும் எதிர்த்தனா; காரணம், சம்பந்தப்பட்ட அமைச்சர் விவாதத்தில கலந்து கொண்டு பேசிவிட்டு அவையைவிட்டு வெளியேறிய நேரத்தில், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அவைககுள் நுழைந்து, 'அரசு இந்த மசோதாவைக கொள்கையளவில்கூட ஏற்றுககொள்ளாது' என்று கருத்தறிவித்ததேயாகும்.

இதற்குமுன் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய உள்துறைத் துணையமைச்சர் வி. சி. சுக்லா, இந்த மசோதாவை ஏற்றுககொள்வதில் அரசுக்கு நடைமுறைச் சிக்கல் ஏதும இல்லை என்றும் 14 மொழிகளிலும் ஒரே நேரததில் மொழி பெயர்ப்பு வேலையைச் செய்வதில் பணச் செலவுகூட ஒரு பொருட்டல்ல என்றும் குறிப்பிட்டிருக்கிறுர்.

அரசியல் சட்டம், இந்தியையும் ஆங்கிலத்தையும் மட்டுமே ஆட்சிமொழியாக வரையறுததிருககிறது என்றும், அதனால எலலா 14 மொழிகளிலும பேசுவது முறைதானு எனபதே தமது ஐயம எனறும அவர் கூறினா.

அமைச்சர் தமது குறுகிய நேரப் பேசசுககுப்பின அவையை விட்டு வெளியேறினர்.

திரு. இரா. செழியன் விவாதத்துக்குப் பதிலளிககத் துவங்கும் நேரத்தில இப்படி அமைச்சர் வெளியேறுவது முறையா—என்று கேட்டு, பல எதிர்க் கட்சி உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

எதிர்க் கட்சியினரின் அதிருப்தியை, தலைமை வகித்த துணை அவைத் தலைவரும் ஏற்றுக் கொண்டார்; 'அமைச்சர் இப்படி அவையைவிட்டு வெளியேறுவதாயிருந்தால், குறைந்த பட்சம் அவர் தமது உதவியாளரையாவது அவையில் இருக்கச் செய்திருக்க வேண்டும்' என்று கருத்தறிவித்தார்.

இந்த நேரத்தில்தான் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அவைக்குள் நுழைந்தார்.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய திரு. செழியன், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தத்தம் தாய்மொழியில் பேசுவதற்கு வசதியாக எல்லாவித மான முயற்சிகளும் எடுக்கப் பட வேண்டுமென்றும், இதன் துவக்கமாக இந்த மொழிகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனறும் கேட்டுக் கொண்டார்.

மசோதாவை ஆதரித்துக் கழக உறுப்பினர் திரு. எஸ். கந்தப்பன் உணர்ச்சிததும்பப் பேசினர்; அவர் குறிப்பிட்டதாவது :—

" உறுப்பினர்கள் தத்தம் தாய் மொழியில் பேசவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

" ஆங்கிலமோ, இந்தியோதான் நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்படுமேன்றல், 'இந்த இரு மொழிகளும் தெரிந்தவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க முடியும்' என்பதாகிவிடும் !"

அவர் தமது பேச்சில், மத்திய அரசின் மொழிக் கொள்கையைக் கடுமையாகக் குறை கூறினர் ;

' நன்மை—தீமை எதையும் பாராமல் இந்தியைப் பரப்புவதில்தான் அரசு தீவிரமாக இருக்கிறது "

என்று அவர் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்.

திரு. டி. விசுவநாதனும், எச். சி. முகர்ஜியும் மசோதாவின் குறிக்கோளை ஆதரித்தனர்.

திரு. விசுவநாதன் பேசுகையில், 'தேசிய ஒருமைப்பாடு இயற்கையாக வளரவேண்டுமானல் மசோதாவை ஏற்றுக்கொண்டு அதைத் தீவிரமாகச் செயல் படுத்துவதே சிறந்த வழியாகும்' என்று குறிப்பிட்டார்.

பல உறுப்பினர்களும், அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளுக்கும்—

(8-ம் பக்கம் பார்க்க)

கார்மேகம் சூழும் நேரத்தில் விண்மீன்கள் மறைவதுபோல்.....

தமிழரின் தனிப் பண்பாடு காலத்தால் மறைந்துவிட்டது

இடைவெளியில் ஏற்பட்டுவிட்ட பிளவை நிறைவு செய்து எங்கும் எதிரொலிக்கச் செய்வது அவசியம்

தமிழறிஞர்களுக்கு முதலமைச்சர் அண்ணு வேண்டுகோள்

சென்னை, ஆக. 10—

" காலத்தால் மிகுந்த பழமையான தமிழ்ப் பண்பாட்டில், இடைக்காலத்தில் பெரும் இடைவெளி ஏற்பட்டு கலப்படம் ஆகிவிட்டது; அதனுல் இன்று சமூகத்தில் தமிழ்ப் பண்பாடு எதிரொலிக்கவில்லை; இடைக் காலத்தில் ஏற்பட்ட கலப்படத்தை நீக்கித் தமிழ்ப் பணபாட்டை அனைவரும் கடைபிடிக்குமாறு செய்ய வேண்டும்.

" தமிழ்ப் பண்பாட்டில் தனித் தன்மைகள் உள்ளன என்பதில் எவருக்கும் ஐயமில்லை ; ஆனுல், தமிழ்ப் பண்பாடுகள் இன்று சமூகத்தில் கடைபிடிக்கப்படுகின்றனவா என ஆய்ந்து பார்ககவேண்டும்.

' கார்மேகம் சூழும் நேரத்தில் விண்மீன்கள் மறைந்து விடுவதுபோல், தமிழனுடைய தனிப் பண்பாடுகள் மறைந்துகிடக்கின்றன. தமிழர் பண்பாடு, காலத்தில் மூத்தது என்ருலும, அதில் குற்றங்குறைகள் இருக்கின்றன என்று சிலர் கருதுகிருர்கள் ; அப்படிக் கருதுகின்றவர்களிடததிலே கசப்படைவதால் எவ்விதப் பயனுமில்லை "

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், தமிழ் வட்டத்தின் சார்பில் நடைபெற்ற சங்கத தமிழ விழாவில் சிறப்புரையாற்றுகையில் சுட்டிக்காட்டித தமிழறிஞர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது :—

"தாய்மொழி அழியாதது; தமிழ்ப் பண்பாடு காலத்தை வென்றது. அந்தப் பண்பாடு பிறநாட்டுப் பண்பாடுகளைப்போலல்லாமல் இன்றளவும் நின்று நிலவுகின்ற தனித தன்மை பெற்றது.

நமது பண்பாட்டின் சிறப்புக்களையெல்லாம் காவியத்திலும், கவிதைகளிலும் காட்சியாகப் பார்க்க நாம் விரும்புகிருேம்.

வானத்திலே கருமேகங்கள் இல்லாதபோது கணக்கற்ற விண்மீன்களை நம்மால் காணமுடிகிறது; ஆனல் கருமேகம இருக்கிறபோது, ஒளிவிடும் விண்மீன்கள் நமது கண்களுக்குத் தட்டுப்படுவதில்லை; கருமேகம இல்லாதபோது விண்மீன்களை வைத்துக்கொண்டு பாதையறிந்து செல்லமுடியும்; விண்மீன்களின் பயனை உணர முடியும்.

அதுபோலதான், நமது நாட்டின்—நமது இனத்தின் பண்பாடு, காலமென்னும் கருமேகத்தால் சூழப்பட்டுவிட்டது. பிறபண்பாடுகள் நமது பண்பாட்டுடன் இழைந்துவிட்டதால் அதில் கதம்பம் ஏற்பட்டது.

நமது பண்பாடு ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது மட்டுமலல — நாலாயிரமாண்டுகளுக்கும் முற்பட்டது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ப் பண்பாடு எப்படி இருந்

(8-ம் பக்கம் பார்க்க)

அன்பினல் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அதிகாரிகள் செயல்பட வேண்டும்

இந்த நூற்றுண்டின் தத்துவம் இது---'அதிகாரத்தால் மக்களை ஆட்டிப்படைக்கலாம்' என்ற நிலை மாறிவிட்டது

பொது நிர்வாகம் பற்றிய கருத்தரங்கில் முதலமைச்சர் அண்ணு விளக்கமும் வேண்டுகோளும்

சென்னை, ஆக. 10—

"சனநாயக நாட்டில் நிர்வாகத்தை நடத்திச் செல்கின்ற அதிகாரிகளுக்கும்—பொதுமக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியது அவசியம்.

"சனநாயகம் சிறப்பாகச் செயல்பட, மக்களின் குறைகளை அவ்வப்போது புதிய முறைகளைக் கையாண்டு அதிதாரிகள் தீர்த்துவைப்பது மிகவும் அவசியமாகும்; இதை நமது மாநில அரிகாரிகள் கடைபிடித்து வருவது பராாட்டுக்குரியது.

"மனிதர்களின் தேவைகள் வளர்ந்து வருகின்ற இந்தக் காலத்தில், அந்த தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு மக்கள், அரசை நாடுவது என்பது இயற்கை. அரசிடமிருந்தும், அதிகாரிகளிடமிருந்தும் பொதுமக்கள் எவற்றை எதிர்பார்க்கிருர்கள் என்பதை அறிந்தால் அதற்கேற்ப தக்க நடவடிக்கை எடுத்துச் செயல்பட ஏதுவாக இருக்கும். மக்களின் கருத்தை அறிந்து அவற்றுக்கேற்ப செயல்பட வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

"இந்தியா போன்ற சனநாயக நாட்டில், பழைய குறைகளைத் தீர்த்தவுடன் புதிய குறைகள் தோன்றுவது இயற்கையே. ஒரு மாவட்ட அதிகாரியாலோ, அல்லது அந்தப் பகுதியில் உள்ள மற்ற அதிகாரிகளாலோ நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளையும் மக்கள் எழுப்பலாம்; அப்படி இருந்தாலும், அவற்றை அதிகாரிகள் பொறுமையுடன் கேட்டு, அவற்றை அவர்களால் நிறைவேற்ற முடியாத நிலைமையை பக்குவமாக விளக்கிக் கூறலாம். இப்படிச் செய்வதால் பொதுமக்கள் சிறிது திருப்தியடைய வழி இருக்கிறது; 'அதிகாரிகள் அனுதாபத்துடன் நமது குறைகளைக் கேட்டனர்' என்ற மனநிறைவுடன் பொதுமக்கள் திரும்பும் வகையில் அதிகாரிகள், தங்கள் செயல் முறைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

"அதிகாரிகள், அன்பினல் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று செயல்பட வேண்டும்; இது, இந்த நூற்றுண்டின் தத்துவம்! 'அதிகாரத்தால் மக்களை ஆட்டிப் படைக்கலாம்' என்பது பழைய தத்துவம்! அதிகாரிகள், புதிய மனப்பான்மையை வளர்த்துக்கோள்ள வேண்டும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற---பொது நிர்வாகம் பற்றிய கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:—

மாவட்ட ரீதியில், பொதுமக்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகள்—அதில் நிறைவேற்றப்பட்டவை -- நிறைவேருமல் விடப்பட்டவை -- நிறைவேறும் தருவாயில் உள்ளவை—என்று பாகுபடுத்தி, புள்ளிவிவரம் தயாரிப்பது நல்லது.

பொதுமக்களின் குறைகளைப் போக்குவதென்பது மிகவும் முக்கியமானதொன்றாகும்; கலெக்டர்கள், இதற்கென்று தனியாக நேரம் ஒதுக்கிக்கொள்ளுவதுகூட நல்லது. அரசு அளித்த வாக்குறுதிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி சட்டமன்றத்தில் ஒவ்வோர் ஆண்டும் விவரங்கள் தரப்படுகின்றன. அதே மாதிரி கலெக்டர்களும் பொதுமக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதிகளையும், அவற்றை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் பற்றி அவ்வப்போது அறிக்கைகள் அனுப்பலாம்.

இளம் வயதினராக உள்ள மாவட்ட அதிகாரிகள், பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும்போது, அவர்களுடன் தமிழிலேயே பேசிப் பழகிக்கொள்ள வேண்டும்; மக்கள் சொல்லுவதை முழுவதுமாகக் கேட்க வேண்டும்; அல்லது கேட்பது போல் காட்டிக்கொள்ள வேண்டும். பெரிய அதிகாரிகளிடம் நேரில் வருவதற்கு எளிய மக்கள் அஞ்சுவர்; அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும்; வருபவர்களை மரியாதையுடனும் நடத்த வேண்டும்.

பொதுமக்களின் பிரதிநிதிகள் அதிகாரிகளை அணுகி, பொதுமக்களின் நன்மை குறித்துப் பல வேண்டுகோள்களை விடுக்கலாம்; ஆனல், 'வேலை தர வேண்டும்; இவரை மாற்ற வேண்டும் --- அவரை மாற்ற வேண்டும்' என்று கோரி அதிகாரிகளை அணுகுவதைப் பொதுமக்கள் பிரதிநிதிகள் குறைத்துக் கொள்ளவேண்டும்.

கருதிய காலம் முடிந்தது -- செயல்படும் நேரம் வந்தது!

அதிகாரிகள் பற்றிய புகார்கள் அமைச்சர்களுக்கு வரும்போது அதுபற்றித் தகவல் அறிய அமைச்சர்கள் அதிகாரிகளை விளக்கம் கேட்டால், அது குறித்து அதிகாரிகள் தவருகக் கருதக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் செய்கிற முடிவில் இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக் காட்டுகிற அதிகாரிகள்தான் உண்மையிலேயே மக்களுக்கும் சனநாயகத்திற்கும் சேவை செய்பவர்கள்! 'அமைச்சர்கள் சொல்வதில் தவறு இருக்குமா?' என்று கருதிக் கொண்டிருப்பவர்கள், உண்மையில் சனநாயகத்திற்கு ஊறு விளைவிப்பவர்கள்!

அமைச்சர்கள் சொல்வதைச் செயல்படுத்தத்தான் நாம் இருக்கிறேம்' என்று கருதிக் கொண்டிருந்த காலம் முடிந்து இப்போது அமைச்சர்களுக்கு உதவியாக தவறுகளைச் சுட்டிக் காட்டும் நண்பர்களாக அதிகாரிகள் செயல்படும் காலம் வந்திருக்கிறது!

மாவட்டக் கலெக்டர்கள் ஊக்குவிக்க வேண்டும்

ஊராட்சிகள், நகராட்சிகள் ஆகியவை, அரசியல் தலைவர்கள்—அமைச்சர்கள் ஆகியவர்களுக்கு வரவேற்பு அளித்து மகிழ்கின்றன; இதைப்போல், மக்கள் நலனுக்குப் பணியாற்றும் ஊழியர்களுக்குப், சிறந்த ஆசிரியர்களுக்கும், சிறந்த விவசாயிகளுக்கும் வரவேற்பு அளிக்க வேண்டும்; ஆக்கப் பணிகளில் ஈடுபடுபவர்களை மாவட்டக் கலெக்டர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

புகார்களுக்கு இனியும் இடந் தரக்கூடாது

அரசு கடன், மற்றும் பண வசூல்களில் அதிகாரிகள் பொதுமக்களைக் கசக்கி பிழிவதாகப் பல புகார்கள் வருகின்றன; அப்படிப்பட்ட புகார்கள் இல்லாமலிருக்க இப்படிப்பட்ட வசூல்கள் நடக்கும் நேரங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அந்தந்தப் பகுதி மக்களின் பிரதிநிதிகளும் சென்று வசூல் செய்ய வேண்டும். இதற்குப் பொதுமக்கள் பிரதிநிதிகள் தகுந்த ஒத்துழைப்புத் தர முன்வர வேண்டும்.

அந்த நம்பிக்கை எனக்கு உண்டு!

கட்சி அரசியல் காரணமாக அதிகாரிகளுக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. 20 ஆண்டுக் காலம் ஒரு கட்சி ஆட்சியில் இருந்து, இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரும்போது அதிகாரிகளால் பழைய தொடர்புகளை விட்டுவிட முடியாது; அப்படி விட்டுவிட வேண்டும் என்று நான் கூறமாட்டேன்; ஆனல், அதிகாரிகளின் தீர்ப்புகளிலேயே இந்தத் தொடர்புகள் குறுக்கிடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல எனது கட்சித் தோழர்களும் உங்களிடம் ஏதாவது கேட்டுத் தொந்தரவு கொடுத்தால், அதைத் தயங்காமல் எனக்குத் தெரியப்படுத்தலாம்; அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

'மொழி கொள்கையை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்'

'இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்பது எவ்விதத்திலும் நியாயமானதாகாது'

கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு திட்டவட்டமான அறிவிப்பு

ஜெய்ப்பூர், ஆக. 10

"மத்திய அரசு தனது மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டும்; ஆங்கிலத்தை அகற்றி இந்தியை மட்டும் திணிப்பதை நிறுத்தி எல்லா மொழிகளுக்கும் சம வாய்ப்பு அளித்துச் செயல்பட வேண்டும்.

"மற்ற மொழிகளைவிட ஒரு மொழி மட்டுமே உயர்ந்த மொழி என்பதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை; அவ்விதமிருக்கையில், ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியை மட்டுமே தேசிய மொழியாகக் கொள்ளுவது எவ்விதத்திலும் நியாயமானதாகாது"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, செய்தியாளர்களிடம் பேசுகையில் கருத்தறிவித்திருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"தென்னிந்தியாவில் இந்திக்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்படுவதற்கு வடநாட்டு இந்தி வெறியர்களே காரணமாவர். அவர்கள் இன்னும் சற்று நயத்துடன் செயல்பட்டிருப்பார்களானல், தென்னுட்டு மக்கள் ஓரளவுக்கு இந்தியைக் கற்றுக்கொண்டிருக்கக்கூடும்.

உதாரணமாக ஓரிரு நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்தியப் பள்ளிகளில் பயிற்சிமொழி சம்பந்தமாகக் கையாண்ட முறையும், மத்திய அரசால் ஆங்கிலத்திற்குப்பதில் இந்தியைப் பயன்படுத்த முனைந்ததும் ஒழுங்கான செயல்களல்ல!

திருவனந்தபுரத்தில் உள்ள மத்தியப் பள்ளியின் மூன்றும் வகுப்புக் குழந்தைகள் சில பாடங்களை இந்தியில்தான் கற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இத்தனைக்கும் 95 சதவிகிதக் குழந்தைகள் இந்தி பேசாத குழந்தைகளாவர். இப்பள்ளியில இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டார்கள் 25 பேர் இருப்பதே அரிதாகும்."

"மத்தியப் பள்ளிகள் என்றுல், 'மத்திய அரசு ஊழியர்களின் குழந்தைகளுககாக' என்றல்லவா பொருள்படும்?' என்று ஒருவர் கேட்டதற்கு, நம்பூதிரிபாடு கோபமாகப் பதில கூறியதாவது:—

"இல்லை; பெரும்பாலான மாணவர்கள் இந்தி பேசாதோராவர்; அவர்களை இந்தி கற்குமாறு நீங்கள் கட்டாயப் படுத்த முடியாது.

மலையாளத்திலோ, ஆங்கிலத்திலோ கல்வி கற்பிக்க அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. இதற்கு மாருக மத்தியப் பள்ளிகள் இயங்குமானல், அவைகளின் தொடர்பை நாங்கள் முறித்துக்கொள்ளவேண்டியவர்களாவோம்.

இந்தியை நீங்கள் கட்டாயமாகத் திணிக்க முயன்றுல், 'இந்த நாட்டை நீங்கள் துண்டாட முயலுகிறீர்கள்' என்பதே பொருளாகும்.

மேலும் தொடர்ந்து அவர், 'இணைப்பு மொழி சம்பந்தமாக விருப்பு வெறுப்பின்றி விவாதித்து முடிவெடுக்க வேண்டும்' என்று கூறினுர்.

சில நாட்களுக்குமுன், மத்திய உள்துறை நாடாளுமன்ற விவாத நிகழ்ச்சிகளை இந்தி மொழியில் கேரள அரசுக்கு அனுப்பியதாகவும், இந்தியின் ஆங்கில மொழி பெயர்ப்பை அனுப்பித் தருமாறு கேட்டபோது, கேரளப் பல்கலைக் கழகத்தின் இந்திப் பிரிவின் உதவியை இதற்குப்பயன்படுத்திக் கொள்ளுமாறு கேரள அரசுக்குக் கூறப்பட்டதாகவும் அவர் சொன்னுர்.

"இது சம்பந்தமாக நான் உள்துறையமைச்சர் சவானுக்குக் கடிதமொன்றை எழுதினேன்; அதில்,

"மத்திய அரசின் கொள்கை இப்படித்தான் இருக்குமென்றுல், இந்தி எதிர்ப்பில் தமிழக முதலமைச்சர் அண்ணுவின் கரத்துக்கு வலியூட்ட என்னைக் கட்டாயப்படுத்துகிறீர்கள்"

என்று குறிப்பிட்டிருந்தேன்.

காற்று மண்டலம் நச்சு மயமாகிறது!

உலகளாவிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முடிவு

கணக்கிட இயலாத இழப்பைத் தடுக்கப் பெரும் முயற்சி

இலண்டனிலிருந்து லாஸ் ஏஞ்செல்ஸ் வரை—நியூயார்க்கிலிருந்து டோக்கியோ வரை—உலகின் எல்லா நாடுகளிலும்—மனிதன், தான் சுவாசிக்கும் காற்றுக்குள் பலவகை வாயுக்களையும், கெடுதலான இரசாயனப் பொருள்களையும் விடுகிறன். தான் வசிக்கும் காற்று மண்டலத்தை நச்சுப்படுத்துகிறன்.

சென்ற 30 ஆண்டுக்காலமாக இந்தப் பிரச்சினை மேலும் மேலும் மோசமாகி வந்திருக்கிறது. நச்சுப்படுத்தப்படும் ஏரிகள், ஆறுகள் பெரும் கடல்களைவிட, காற்று நச்சுப்படுத்தப்படும் ஆபத்து மிக மிக அதிகமாகிவிட்டாது.

காற்று நச்சாவது இப்பொழுது உலகமளாவிய பிரச்சினையாகிவிட்டது நகரங்கள் பெருகிவருவதும், தொழில் வளர்ச்சியும், மோட்டார் கார்கள் மிகமிக அதிகரித்து வருவதும் இந்த நச்சுக்குக் காரணம்.

உலோகங்களை இந்த நச்சு அரித்துவிடுகிறது; கட்டிடங்களை அதிரச் செய்கிறது; தாவரங்களையும், விலங்குகளையும் மனிதனையும் கொன்றுவிடுகிறது.

இதனுல் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் இழப்புக் கணக்கிட முடியாதது. தொழிலுக்குப் பல மணி நேர மனித உழைப்பு இழப்பு; காரணம், சுவாசக் கோளாறுகளும், பிற நோய்களும் மயக்கவைக்கும் அளவிலே ஏற்படுவதுதான்.

அமெரிக்காவில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மூதன்முதலில் முன்வந்த மாநிலம் கலிபோர்னியா; காற்று நச்சை எதிர்க்க கோடிக் கணக்கான டாலர்கள் அது செலவழித்தது. மோட்டார் கார்கள் -- தொழில்கள்மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்க அது வழிகாட்டியது.

ஆயினும், இன்று அமெரிக்கா இந்தப் பிரச்சினையை நாடு அளாவிய முறையிலே தாக்கிவருகிறது. தேசியக் காற்றுத் தூய்மை ஆலோசனைக் குழு ஒன்றுக்கு பேரும் புகழும் பெற்ற 15 பேரை, அதிபர் ஜான்சன் அண்மையில் நியமனம் செய்தார்.

அமெரிக்கச் சுகாதாரம்—கல்வி—நல்வாழ்வுத் துறைக்கு இந்தக் குழு அமெரிக்காவின் புதிய காற்றுத தூய்மைச் சட்டம் சம்பந்தமான கொள்கைப் பிரச்சினைகளில் ஆலோசனை கூறும்; பிரச்சினையை எப்படித் தாக்குவது என்பது பற்றிக் குடியரசுத் தலைவருக்கு இக்குழு கருத்துக்கள் கூறும்.

இந்தச் சட்டத்தின் விதிகளின் கீழ், காற்று நச்சை எதிர்க்க 428 கோடி டாலர் மூன்றுண்டுத் திட்டமொன்றைச் சுகாதாரம்—கல்வி — நல்வாழ்வுத்துறை ஏற்கனவே தொடங்கிவிட்டது.

வட்டக்கழக--வட்ட தகுதிபடைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்

செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம்

ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் (சனி—ஞாயிறு) நடைபெற்ற வட்டக் கழக—வட்டத் தகுதி படைத்த பெருநகரக் கழகத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம் இங்கு தரப்படுகிறது --- (விடுபட்டுள்ள பிரதிநிதிகளின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும்) --- தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் மாவட்டக் கழகத் தேர்தலில் வாக்களிக்கும் உறுப்பினர்களாவார்கள்.

செங்கற்பட்டு மாவட்டம்

திருத்தணி வட்டம்

செயலாளர் :

ஏ. பரந்தாமன், பி.எஸ்சி., ஆற்காடு குப்பம்

பிரதிநிதிகள் :

பி. கோவிந்தசாமி, திருத்தணி
பி. தேவராசு, திருத்தணி
வி. கே. சீனிவாசன், திருத்தணி
எம். சிவலிங்கம், அத்திமாஞ்சேரி பேட்டை
முனிகிருட்டினன்

மதுராந்தகம் வட்டம்

செயலாளர் :

வி. வெங்கா, சீத்தாபுரம்

பிரதிநிதிகள் :

ஆ. சபாபதி, பாதிரி
சுதர்சனம், செய்யூர்
ஆ. சண்முகம், மதுராந்தகம்
எஸ். எல். இலட்சுமிபதி, செய்யூர்
சு. சனர்த்தனம், மேலவரம்பேட்டை
கே. அரங்கநாதன், கூவத்தூர்
வி. வெங்கடபெருமாள், சீத்தாபுரம்
கே. கோவிந்தசாமி, எம். சித்தாமூர்

திருப்பெரும்புதூர் வட்டம்

செயலாளர் :

மு. சி. முனுசாமி, மூன்றும் கட்டளை

பிரதிநிதிகள் :

படப்பை ஆறுமுகம், கீழ்ப்படப்பை
தி. சு. இலக்குமணன், திருப்பணிவாக்கம்
எம். எஸ். ஏ. ஈசுவரன், ஆவடி
மு. கரிகாலன், பூவிருந்தவல்லி
தி. ந. சம்பந்தம், குன்றத்தூர்
பி. வி. கே. சாமி, சுங்குவார்சத்திரம்
பி. சின்னசாமி, பூவிருந்தவல்லி
ஆ. செயராமன், திருப்பெரும்புதூர்
மா. சி. துரையரசு, மாங்காடு
செ. பெருமாள்
தண்டரைபட்டாபிராம்

பொன்னேரி வட்டம்

செயலாளர் :

மு. கேசவன், மீஞ்சூர்

பிரதிநிதிகள் :

அமீது
திருமாவளவன்
கோ. வெற்றிவீரன்
கி. மணிவண்ணன்
ம. தி. தூயமணி
எம். முத்து
ஈ வி. சேது
எம். ஆர். வேலாயுதம்
நாமதேவு
கி. அப்பாதுரை

காஞ்சீபுரம் வட்டம்

செயலாளர் :

டி. சீனிவாசன், பரந்தூர்

பிரதிநிதிகள் :

கே மணி, களக்காட்டூர்
பி. ஜி. அண்ணாமலை, பரந்தூர்
கு. வ. நெடுஞ்சேரன், அய்யம்பேட்டை
கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கம்பராசபுரம்
மு. சீனிவாசன், வெங்கடாவரம்

காஞ்சீபுரம் நகரம்

பிரதிநிதிகள் :

சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., காஞ்சிபுரம்–2
சி. வி. இராசகோபால், எம்.எல்.சி
டி. சபாபதி, காஞ்சிபுரம்
கே. டி. எஸ். மணி, காஞ்சிபுரம்
இரா. வெங்கடேசன், காஞ்சிபுரம்–2
த. கந்தசாமி, காஞ்சிபுரம்–3
சு. திருவேங்கடம் எம்.சி. காஞ்சிபுரம்–1
சி. ஆறுமுகம், காஞ்சிபுரம்–2
இ. எத்திராசன், காஞ்சிபுரம்–2
ச. முருகேசன், காஞ்சிபுரம்–2

திருவள்ளூர் வட்டம்

பிரதிநிதிகள் :

எத்தராசு
சண்முகம்
தமிழ்வேந்தன்
திராவிடபக்தன்
பொ. நடராசன்
பஞ்சாட்சரம்
வணங்காமுடி
வேதாசலம்
வேலு
டி. சி செல்வராசன், திருவள்ளூர்

செங்கற்பட்டு வட்டம்

செயலாளர் :

செ. ஏ. பலராமன், செங்கற்பட்டு

பிரதிநிதிகள் :

ஏ. ஆர். அன்சர் எம்.சி., செங்கற்பட்டு
சொ. க. சுந்தரேசன், செங்கற்பட்டு
சிதம்பரம், தத்தளூர்
எஸ். கே. மாணிக்கம், செம்பாக்கம்
செ. கோ. விசுவநாதம் எம்.எல்.ஏ., செங்கற்பட்டு
எம். எஸ். ஏ. வகாப், திருககழுக்குன்றம்
எம். வேதாசலம், தேசுமுகிப்பேட்டை
செ. மு. தட்சணாமூர்த்தி, நத்தம்
வ. பசுபதி எம்.சி., செங்கற்பட்டு
கோ. ஆலாலசுந்தரம், செங்கற்பட்டு

தெ. ஆ. மாவட்டம்

கள்ளக்குறிச்சி வட்டம்

செயலாளர் :
கொ. மாரியப்பன், வடக்கனந்தல்

பிரதிநிதிகள் :

அ நடராசன், நாகலூர்
வெ. இராமன், கடத்தூர்
கொ. சின்னசாமி, தொட்டியம்
பூ. வடிவேலன், சோமாண்டார்குடி
மா. தங்கவேலன், கள்ளக்குறிச்சி
கி. வேணு, கள்ளக்குறிச்சி
டி. முத்து, கள்ளக்குறிச்சி
பா. சு. வையாபுரி, பரமநத்தம்
கே. என். இருசையன், செல்லம்பட்டு
ஆர். கலியமூர்த்தி, மாதவச்சேரி

திருக்கோவிலூர் வட்டம்

செயலாளர் :
வீ. சுப்பிரமணியன், வண்டிப்பாளையம்

பிரதிநிதிகள் :
கை. சந்திரகாசன், பல்லரிபாளையம்
கே. கோடி கிருட்டினன், திருக்கோவிலூர்
சே. வி. கீர்த்தி, திருக்கோவிலூர்
தி. கு. சாமிநாதன், திருவெண்ணைநல்லூர்
இரா. கோவிந்தசாமி, தேவனூர்
எல். ஆறுமுகம், கருவேப்பிலைபாளையம்
எஸ். முனுசாமி, திருக்கோவிலூர்
இரா. சுப்பிரமணியன், கண்டாச்சிபுரம்
கா. செல்லப்பன், உளுந்தூர்பேட்டை
தி. வ. அண்ணாதாசன், திருவெண்ணெய்நல்லூர்

விருத்தாசலம் வட்டம்

செயலாளர் :
தரு. இராசவேலு, கொக்கநகர், நெய்வேலி-2

பிரதிநிதிகள் :
சிவப்பிரகாசம், முதனை
எம். செல்வராசு, விருத்தாசலம்
பூமாலை கணேசன், கம்மாபுரம்
வி. எஸ். மணி, விருத்தாசலம்
சோமசுந்தரம், வேப்பன்குறிச்சி
ஏ. இராசாங்கம், விருத்தாசலம்
சி. கோவிந்தசாமி, இ. கீரநூர்
து. பொன்னுசாமி, மலையனூர்
என். கோவிந்தசாமி, தொரவனூர்
செ. மா. முத்துசாமி, பெண்ணாடம்

கடலூர் வட்டம்

செயலாளர் :
ஏ. வி. தண்டபாணி, நெல்லிக்குப்பம்

பிரதிநிதிகள் :
ஆர். இராமானுசம், கடலூர்-2
இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., புதுப்பாளையம்
எஸ். கே. இராமசாமி, குணமங்கலம்
மு. சீனிவாசன், புதுப்பாளையம்
எஸ். தியாகராசன், பணக்கோட்டை
கே. வி. பட்டாபு, குறிஞ்சிப்பாடி
சி. பாலவேலாயுதம், நெல்லிக்குப்பம்
கி. கோவிந்தராசன், திருப்பாதிப்புலியூர்
ஏ. மணி, பண்ருட்டி
மு. கலியபெருமாள், நெல்லிக்குப்பம்

திண்டிவனம் வட்டம்

செயலாளர் :
ஆ தங்கவேலு, காவேரிப்பாக்கம்

பிரதிநிதிகள் :
இமயவரம்பன், மரக்காணம்
அபிமன்னன், ரெட்டணை
ந ராசன், திண்டிவனம்
பி ஏ. கரீம், கோட்டகுப்பம்
வி. செம்புகுமார், கள்ளக்கொளத்தூர்
எஸ். எம் இராமசாமி, ஓங்கூர்
ஏ. நடராசன், திண்டிவனம்
த. பூங்காவனம், நடுவநந்தல்
மு. நாராயணன், திண்டிவனம்
தி. க. குமாரசாமி, திண்டிவனம்

செஞ்சி வட்டம்

செயலாளர் :
ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., ஈபக்குணம்

பிரதிநிதிகள் :
எஸ். சகாதேவன்
மு. பழனி
ஆர். ஆர். முனுசாமி
சு. இராசாக்கண்ணு
ப. இராமசாமி

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் வட்டம்

செயலாளர் :
எஸ். ஏ. சேக் சுல்தான். இராமநாதபுரம்

பிரதிநிதிகள் :
கே. இப்ராகிம் கனி, இராமேசுவரம்
உ. குப்புசாமி, உத்திரகோசமங்கை
த. ந. இராமசாமி
எஸ். இராமசாமி, கீழக்கரை
வ. இராமச்சந்திரன். இராமநாதபுரம்
டி. தங்கப்பன் எம்.எல்.ஏ., இராமநாதபுரம்
சி. தினகரன், கூரியூர்
க. இராமு, பெருங்குளம்
மு. பக்கீர் முகமது, பனைக்குளம்
சோ. விசயன், இராமநாதபுரம்

பரமக்குடி வட்டம்

செயலாளர் :
சுப. தங்கவேலன், தணியாபுலி

பிரதிநிதிகள் :
மு. சேதுராமன்
த. மு. ரா. லிங்கம்
க. சேதுராமன்
மரிய மைக்கேல்
இரா. சு. மணி
பாஸ்கரன்
அப்துல் பாரி
அழகு
வி. என். வேலுச்சாமி
இ. வி. முத்தையா, பரமக்குடி.

திருவில்லிபுத்தூர் வட்டம்

செயலாளர் ;
ஆர். பி. ஆதிநாராயணன், இராசபாளையம்

பிரதிநிதிகள் :
டீ. க. நடராசன், கூமாபட்டி
தி. ஆ. இராமசாமி, வத்திராயிருப்பு
போ. லிங்கசாமி, தொம்பக்குளம்
சு. திருப்பதி, குறிச்சியார்பட்டி, சோழபுரம்
டி. கே. கே. சாமி, சத்திரப்பட்டி
சு. தலைமலை, இராசபாளையம்
ச. காளிமுத்து, தளவாய்புரம்
ஆ. சண்முகவேலு, முத்துசாமிபுரம்
இரா. த. இராமச்சந்திரன், இராசபாளையம்
மா. குருசாமி, திருவில்லிபுத்தூர்

சாத்தூர் வட்டம்

செயலாளர் :
கோ. வரதராசன், அப்பைய நாயக்கன்பட்டி

பிரதிநிதிகள் :
ப. சண்முகக்கனி, விருதுநகர்
நா. சுப்பிரமணியம், சாத்தூர்
கா. சுப்பையா, வெள்ளூர்
வி. டி. நடராசன், சாத்தூர்
எஸ். கே. சாமி, தாயில்பட்டி
சி. பழனிச்சாமி, சிவகாசி
சி. பாலு, இனாம்ரெட்டியபட்டி
எம். ஜி. மாரியப்பன், திருத்தங்கல், சாத்தூர்
ஏ. துரைக்கண்ணன், நடுத்தெரு, சிவகாசி
வ. பெ. வடிவேல், விருதுநகர்

திருவாடானை வட்டம்

செயலாளர் :
நவமார்க்கண்டேயன், சனவேலி

பிரதிநிதிகள் :
எஸ். முத்துகுமார், உப்பூர்
ஞா. குசைமுத்து, கலங்காபுலி
அ. சுப்பிரமணியன், சனவேலி
வி. வீரப்பன், அரசூர்
சி. கருப்பையா, திருவாடானை
ப. அப்துல் சமது, சுந்தரபாண்டியன் பட்டணம்
க. போ. வடிவேல், மண்டலக்கோட்டை
எஸ். காசிம், தேவகோட்டை
க. தியாகராசன், ஆதியாகுடி
க. தியாகராசன், ஆர்ச், தேவகோட்டை

முதுகுளத்தூர் வட்டம்

செயலாளர் :
மாங்குடி மதியழகன், பேரையூர்

பிரதிநிதிகள் :
இல. முனுசாமி, அபிரமம்
பட்டம் சையது இப்ராகிம், ஏர்வாடி
அப்பாசு, மீசல்
கா. இராமசாமி, முதுகுளத்தூர்
கி. வையமுத்து, மேலப்பாளையம்
எம். எஸ். சுப்பராமன், நீராவிகரிசல்குளம்
அ. அருணசலம், கமுதி
கு. ஆண்டி, சோடையேந்தல்
இரா. காளிமுத்து, இறைச்சோலம்
மு. கருமலையான், முதுகுளத்தூர்

(4-ம் பக்கம் பார்க்க)

வட்டக் கழக —வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வடாற்காடு
மாவட்டம்

அரக்கோணம் வட்டம்

செயலாளர்:
என். எஸ். பலராமன், அரக்கோணம்

பிரதிநிதிகள்:
எல். வி. மாணிக்கம், மேலப்புலம்புதூர்
கே. ஆர். நீலமேகன், மேலப்புலம்புதூர்
ஏ. எல். சி. கிருட்டினசாமி, அரக்கோணம்
கே. வி. செயராமன், நெல்லூர்பேட்டை
இ. அரங்கநாதன், நெல்லூர்பேட்டை
கே. வரதன், அசல் நெல்லிக்குப்பம்
எம். வெள்ளையன், கரியாக்குடல் கிராமம்
ஆர். பாலசுப்பிரமணியம், நெடும்புலி கிராமம்
கோ. கொள்ளாபுரி, தக்கோலம் காலனி

வாலாசா வட்டம்

செயலாளர்:
தம்பிதாசன், வேலம் கிராமம்

பிரதிநிதிகள்:
பெ. தா. ஈசுவரன், ஆற்காடு
ப. சீராமுலு, மேலப்புலம் புதூர், கலவை
இரா. அரங்கராசன்,
ச. இராதா, சோளிங்கபுரம்
இரா. நன்மாறன், பூண்டி
ஆர். ஆர். சக்கரவர்த்தி, இராமாபுரம், கடப்பேரி
கோ. நெடுமாறன், சுமைதாங்கி
டி. கே. சீதாராமன், ஆற்காடு
பி. சி. சுப்பிரமணியன், காரை, இராணிப்பேட்டை
த. க. பாலசுந்தரம், வாலாசாபேட்டை

செய்யாறு வட்டம்

செயலாளர்:
கே. வரதன், சின்ன ஏழாச்சேரி

பிரதிநிதிகள்:
கே. ஆர். கண்ணன், திருவத்திபுரம்
வே. குப்புசாமி, திருவத்திபுரம்
டி. அருணாசலம், திருவத்திபுரம்
வி. பரமசிவம், பிரம்மதேசம்
மா. நா. இராசமாணிக்கம், திருவத்திபுரம்
எஸ். இலக்குமணன், கோவிலூர்
வி. குட்டியப்பன், திருவத்திபுரம்
பாபு ஜனார்த்தனன், திருவத்திபுரம்
டி. இ. ரபியுல்லா, திருவத்திபுரம்

குடியேற்றம் வட்டம்

செயலாளர்:
பி. கே. முனுசாமி, காட்டுப்பாடி

பிரதிநிதிகள்:
க. பெ. ஆறுமுகம், கழிஞ்சூர்
மு. கோதண்டன், கழிஞ்சூர்
ஏ. இராமகிருட்டினன், குடியேற்றம்
ஆ. அருணகிரி, அழிஞ்சிகுப்பம், இராசக்கல்
கே. ஜி. முனியப்பன், அம்மாபுரம்
பி. ஜி. இராசன் புதுப்பேட்டை, குடியேற்றம்
வெ. அரங்கநாதன், வடச்சேரி
க. அ. நடராசன், கழிஞ்சூர், குடியேற்றம்
சி. என். பிச்சாண்டி, மேல்பட்டி கிராமம்
ஏ. கே. துரைசாமி, குடியேற்றம்

வந்தவாசி வட்டம்

செயலாளர்:
டி. கே. துரை, தெள்ளார்

பிரதிநிதிகள்:
கே. எம். ஏ. அப்துல், வந்தவாசி
அ. சி. இராசாராமன், நெடுங்குணம்
என். கணேசன், வெடால்
மா. சின்னராசு, பெரிய கொழப்பலூர்
ஆர். சீதாபதி, கண்டயநல்லூர்
ஏ. சுல்தான், பெரணமல்லூர்
க. இ. பெருமாள், கீழ் கொடுங்காலூர்
எம். பாலு, மருதாடு
வி. சி. வக்கிரபாணி, வெங்கிடாபுரம்
ஆர். வேணுகோபால், வந்தவாசி

வேலூர் நகரம்

செயலாளர்:
மு. நடராசன், கஸ்பா, வேலூர்

பிரதிநிதிகள்:
மா. பா. சாரதி, கஸ்பா, வேலூர்
சி. வேணுகோபால், வேலூர்
ஏ. கே. அரங்கநாதன், குட்டைமேடு
வி. சி. பாலகிருட்டினன், வேலூர்
வி. மோகனம், நல்லான்பட்டரை
ச. வெங்கடாசலம், சார்பனாமேடு
சானகிராமன், மக்கான்
வி. ஏ. கண்ணன், அரசமரப்பேட்டை
வி. கே. இராமச்சந்திரன், சலவன்பேட்டை
வி. எஸ். பாண்டியன், வேலப்பாடி

திருப்பத்தூர் வட்டம்

செயலாளர்:
சி. எம். எஸ். பாலு, திருப்பத்தூர்

பிரதிநிதிகள்:
டி. தருமலிங்கம், ஆலங்காயம்
டி. ஏ. மணி, திருப்பத்தூர்
எஸ். இலட்சுமணன், சோலார்பேட்
எம். கே. எஸ். மணி, நாயக்கனூர், விசமங்கலம்
ஆ. பெ. வேடியப்பன், ஆதியூர், திருப்பத்தூர்
ஏ. ஆர். தனராமன், திருப்பத்தூர்
மா. மாரப்பன், குரும்பேரி
சௌந்தரராசன், திருப்பத்தூர்
டி. செகநாதன், ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி

போளூர் வட்டம்

செயலாளர்;
தொ. பா. சீனிவாசன், போளூர்

பிரதிநிதிகள்:
எஸ். கணபதி, போளூர்
சி. சின்னத்தம்பி, போளூர்
ம. சக்கரபாணி, போளூர்
பி. கிருட்டினன், போளூர்
டி. வி. இராமபத்திரன், தென்மகாதேவமங்கலம்
சி. கோ. ஞானசேகரன், சின்னபுஷ்பகிரி

ஆரணி வட்டம்

செயலாளர்:
மு. ந. இராமன், சத்திய விசயநகரம்

பிரதிநிதிகள்:
எம். இராசமாணிக்கம், ஆரணி
எஸ். ஏ. கன்னையன், ஆரணி
இரா. வீரபத்திரன், இராட்டினமங்கலம்
ஏ. சி. நரசிம்மன், ஆரணி
வி. கிருட்டினமூர்த்தி, புதுப்பாளையம், ஒண்ணுபுரம்
வி. இ. செயராமன், சேவூர்
எஸ். கன்னியப்பன், இரும்பேடு
ஆ. து. கோவிந்தராசன், நெசல்
ஆ. பச்சையப்பன், விண்ணமங்கலம்
ஏ. செல்வராசு, ஆரணி

புதுவை
மாவட்டம்

புதுவை வட்டம்

செயலாளர்:
சு. ம. சுப்புராயன், சுத்துக்கேணி, வழுதாவூர்

பிரதிநிதிகள்:
எம். ஆனந்தன், மேலவீதி, பாகூர்
வெ. இராமச்சந்திரன், மேலவீதி, பாகூர்
ச. இராமபத்திரன், கல்மண்டபம், மிட்டா மண்டகபட்டு
கு. காங்கேயன், நெட்டப்பாக்கம்
க. இராமசாமி சுத்துக்கேணி, வழுதாவூர் வழி
இரா. சோசன், முதலியார்பேட்டை
ம. கோவிந்தசாமி, வில்லியனூர்
வ. சம்பந்தம் ஏரிபாக்கம், நத்தமேடு
ஆ. மஞ்சினி, நொணங்குப்பம், அரியநகர்
வ. தாயுமானவன், பெத்துசெட்டிபேட்டை

புதுவை நகரம்

செயலாளர்:
செ. முத்து, முதலியார்பேட்டை

பிரதிநிதிகள்:
ச. சிவப்பிரகாசம், முதலியார்பேட்டை
எ. அண்ணாமலை
ப. இராசு, புதுவை-1
அ. நெடுமாறன், புதுவை-1
வீ. பாண்டியன், புதுவை-1
பெ. திருவேங்கடம்
ஏ. புவியரசு, குயவர்பாளையம்
கே. ஏ. ஜலீல், புதுவை-1
வெ. சிங்காரம், முத்தியால்பேட்டை
எம். ஏ. சண்முகம், திருப்பணம்பாக்கம்

சேலம்
மாவட்டம்

மேட்டூர் வட்டம்

செயலாளர்:
அ. பாலு, மேட்டூர் அணை

பிரதிநிதிகள்:
பெ. அமிர்தலிங்கம், வனவாசி
பொ. அம்மாசி, கோவிலூர், துளசிம்பட்டி
ஏ. இராமலிங்கம், ஏ.ஆர்.பி., மேட்டூர் அணை
ப. கண்ணன், சலகண்டபுரம்
என். வி. கன்னியப்பன் பி.ஏ.பி.எல். மேட்டூர்
ம. நடராசன், சலகண்டபுரம்
ம. நடேசன், மேச்சேரி
எல். இராசு, நாட்டாமங்கலம்
சி. வரதாசன், பொட்டனேரி
ஏ. வெங்கடாசலம், மடத்துப்பட்டி, கோனூர்

திருச்செங்கோடு வட்டம்

செயலாளர்:
என். ஏ. நடேசன், நெய்க்காரப்பட்டி

பிரதிநிதிகள்:
கே. பி. செங்கோட்டுவேலு, குட்டிமேய்க்கம்பட்டி
பாட்டப்பன் (எ) ப. செங்கோடன் குமரமங்கலம்
டி. ஏ. இராசவேலு எம்.எல்.ஏ. தோக்கவாடி
ந. இராமசாமி, ஆலாங்காடு புதூர்
மு. சாமியப்பன் சின்னப்பநாயக்கம்பாளையம்
ஆர். சுப்பிரமணியம், பிள்ளாநத்தம்
தே. வை. செங்குட்டுவன், தேவனுங்குறிச்சி
பி. சி. துரைசாமி, பாதரை, சௌதாபுரம், ஈரோடு-6
டி. எஸ். தங்கவேலன், திருச்செங்கோடு
டி. பி. ஆறுமுகம், திருச்செங்கோடு

ஆத்தூர் வட்டம்

செயலாளர்:
க. இராமசாமி, கொண்டயம்பள்ளி

பிரதிநிதிகள்:
டி. கே. தென்னவன், ஆத்தூர்
ஆர். கன்னையன், ஆத்தூர்
க. கணபதி, தாண்டவராயபுரம்
பி. எஸ். அம்பாயிரம், ஆத்தூர்
ப. அ. ஆறுமுகம், ஆத்தூர்
எஸ். சி. மாணிக்கம், செக்காடிபட்டி கிராமம்
ஜி. என். பெரியசாமி, கடமலை
கே. பி. செகநாதன், சல்லாநத்தம்
எஸ். வி. தென்னவன், சீலியம்பட்டி
எஸ். இராமசாமி, ஆத்தூர்

சேலம் வட்டம்

செயலாளர்:
கா. அ. பழனி, திருமனூர்

பிரதிநிதிகள்:
எஸ். கே. இராசன், சேசன்சாவடி
சே. ஆறுமுகம் எம்.எல்.ஏ., பூலாவரி
கு. சி. வெங்கடாசலம், நரசேதிப்பட்டி
இரா. மாணிக்கம், அயோத்திபட்டினம்
பி. இரத்தினவேல், வாழப்பாடி
வா. பெருமாள், உடையாபட்டி
இரா. அரங்கசாமி, சிங்கபுரம்
ப. சீனிவாசன், பனமரத்துப்பட்டி
நா. சு. மணி, மல்லூர்
சி. பி. முத்தழகன், பூலாவரி

ஓமலூர் வட்டம்

செயலாளர்:
இரா. நாகரத்தினம், பூசாரிப்பட்டி

பிரதிநிதிகள்;
மு. பழனி, அழகுசமுத்திரம், கருக்கல்வாடி
எம். பழனியப்பன், துளசம்பட்டி
மா. வெங்கடாசலம் பூசாரிப்பட்டி
கே. முத்துமல்லப்பன், ஓமலூர்
கே. அர்ச்சுனன், ஓமலூர்
கே. கே. மாணிக்கம், தோப்பூர்
அ. முத்து, சரக்கப்பிள்ளையூர்
ஆர். கிருட்டினன், சரக்கப்பிள்ளையூர்
டி. சி. அரங்கசாமி, தாரமங்கலம்
பா. ஆரூன், ஓமலூர்

சங்ககிரி வட்டம்

செயலாளர்:
பா. பண்டரிநாதன், இடைப்பாடி

பிரதிநிதிகள்:
சேட்டு டி. முத்து, இடைப்பாடி

தருமபுரி
மாவட்டம்

தருமபுரி வட்டம்

செயலாளர்:
கே. பெரியசாமி, பழையதர்மபுரி

பிரதிநிதிகள்:
பி. எஸ். இராமகிருட்டினன், பெரியணஹள்ளி
த. சி. காவேரி, தர்மபுரி டவுன்
எஸ். பி. கிருட்டினன்
எம். சி. கிருட்டினன், மாட்லாம்பட்டி
பா. செ. சஞ்சீவி, பாப்பாரப்பட்டி
ஆர். சின்னசாமி, பழையதர்மபுரி
டி. பெரியசாமி, கொளகத்தூர்
பி. வி. மாதேசன், பாப்பாரப்பட்டி
கு. மாரியப்பன், பாலக்கோடு
த. வே. வடிவேலன், தருமபுரி

கிருட்டினகிரி வட்டம்

செயலாளர்:
எம். எஸ். சண்முகம், மத்தூர்

பிரதிநிதிகள்:
எஸ். இலட்சுமணன், பருகூர்
ம. கமலநாதன் எம்.பி., கிருஷ்ணகிரி
கே. கிருட்டினன், காவேரிப்பட்டணம்
வீ. செ. கோவிந்தசாமி, வீரமலை
வே. வெ. சஞ்சீவி, வேலம்பட்டி
டி. கே. சுப்பிரமணியன், பாரூர்
க. ச. செகதீசன், கண்ணஅண்டஹள்ளி
பி. திம்மராயன், கிருஷ்ணகிரி
எம். ஏ. நெடுமாறன், சாமல்பட்டி—மத்தூர்
அனீப்கான், கிருஷ்ணகிரி

அரூர் வட்டம்

செயலாளர்;
கே. மதிவாணன், கோபிலூர்பாளையம்

பிரதிநிதிகள்:
ஆர். இராசன்
ஈ. கே. வேங்கன், எருமியாம்பட்டி
பி. இராமகிருட்டினன்
டி. பொன்னுசாமி, பழையபேட்டை
சி. சேதுராமன், மணியம்பாடி
க. வேடியப்பன், ந. துடுச்சிப்பட்டி
வெ. சாமிக்கண்ணு, புதுப்பட்டி
ஏ. விருத்தாசலம், வெங்கிடசமுத்திரம்
ஆர். முத்து, எம்.பி., அரூர்
எச். எல். முருகேசன், அரூர்

(5-ம் பக்கம் பார்க்க)

மருத்துவப் பட்டதாரிகளுக்கு
கேரள அரசு அறிவிப்பு

திருவனந்தபுரம், ஆக 9—"மருத்துவக் கல்லூரிகளிலிருந்து தேறிவரும் எல்லா மருத்துவப் பட்டதாரிகளுக்கும் வேலை தரும் நிலையில் கேரள அரசு இருக்கவில்லை" என்று அரசு அறிவித்திருக்கிறது.

பத்திரிகை ஊழியருக்கு
மத்திய அமைச்சரவை ஆதரவு

புதுடில்லி, ஆக 8—வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பத்திரிகை ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு, மத்திய அமைச்சரவை தனது ஆதரவைத் தெரிவித்திருப்பதாக நம்பப்படுகிறது.

இன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்களில் பெரும்பாலோர் பத்திரிகையாளரல்லாதோரின் ஊதியக் குழுச் சிபாரிசைச் சட்டபூர்வமாக்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

வட்டக்கழக---வட்டத்தகுதிபடைத்த பெரு நகரக் கழகங்களின் தேர்தல்கள்

செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை

மாவட்டம்

மதுரை தெற்கு

செயலாளர் :

சொ. காவேரிமணியம்,
வழக்கறிஞர், அவனியாபுரம்

பிரதிநிதிகள் :

எஸ். தங்கவேலு,
திருப்பரங்குன்றம்
இரா. பாலு, சிலைமான்
வி. பிச்சை, சோளங்குருனி
க. முத்திருளன், சாமநத்தம்
சு. வெள்ளைச்சாமி, மாடக்குளம்
பி. வி. இராசு, கிழக்குடி
எஸ். கருப்பையா,
நாகமலை புதுக்கோட்டை
பி. சுப்பிரமணியம்,
திருப்பரங்குன்றம்
நா. அய்யம்பெருமாள்,
சின்ன அனுப்பானடி

உசிலம்பட்டி வட்டம்

செயலாளர் :

இரா. சு. தங்கராசன்,
ஏழுமலை, உசிலம்பட்டி

பிரதிநிதிகள் :

இ. முத்து, கட்டக்கருப்பம்பட்டி
மு. பால்சாமி,
சொக்கத்தேவன்பட்டி
க. மாயாண்டி, விக்கரமங்கலம்
எஸ். நெல்லைமாறன், சாப்டூர்
ச. தனுக்கோடி, அத்திப்பட்டி
ச. மகாலிங்கம்,
தொட்டணம்பட்டி, குடிசேரி
வி. துரைசாமி, டி. இராமநாதபுரம்
எம். ஆர். சேகர், உத்தப்புரம்

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு

தவிர்க்க இயலாத நிலை உருவாகிவிட்டது

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியும், தென்மேற்கு ஆசிய நாடுகளும் வெட்டுககிளிகளின் படையெடுப்பை எதிர்நோக்கி இருக்கின்றன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அறிவிப்பு வந்தவுடனேயே முன்னேற்பாடுகள் எடுக்கத் தயாராகி விட்டன---இந்தப் பகுதி நாடுகள் எல்லாம்.

இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலம்தான் அதிகம் பாதிக்கப் படக்கூடிய இடமாகும்.

இப்போதைய வெட்டுக் கிளிகளின் படையெடுப்பைப் பற்றி இந்தத் தகவல் நிலையம் சென்ற ஆண்டு நவம்பரிலேயே எச்சரித்திருந்தது; தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாததால், இனி தவிர்க்க முடியாத நிலை உருவாகி விடும்போலிருக்கிறது.

தற்போதைய 'படையெடுப்பு' குறித்து இந்தத் தகவல் நிலையம் தந்த விவரங்களின்படி ஐ. நா.-வும் எச்சரிக்கை செய்துள்ளது. அத்துடன், 2,85,000 டாலர் செலவில் தடுப்பு மருந்துடன் நிபுணர்கள், பாதிக்கப்படும் பகுதிகளுக்கு உடனே அனுப்பப்படுகின்றனர். மருந்துகளைத் தெளிக்க குட்டி விமானங்களும் இந்த இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

ஒ. கருத்தக்கண்ணன்,
குப்பணம்பட்டி
த. க. பெ. இரத்தினம்,
தும்பக்குண்டு

மதுரை நகரம்

செயலாளர் :

கு. திருப்பதி பி.ஏ.பி.எல்.,
மதுரை-1

பிரதிநிதிகள் :

அருணாசலம், மதுரை-1
பி. அறிவழகன், மதுரை-1
ஏ. வி. இராசு,
மீனாம்பாள்புரம், செல்லூர்
என். இராமநாதன், மதுரை-1
சொ. கல்யாணசுந்தரம், மதுரை-1
ஏ. எஸ். தங்கக்கனி,
மாகாளிப்பட்டி, மதுரை
மு. நடராசன், கோரிப்பாளையம்
எஸ். பாண்டி, மதுரை-9
வி. சு. மணி, மதுரை
எம். எம். முத்தரசு, மதுரை-9

மதுரை வடக்கு

செயலாளர் :

பி. எஸ். மணியன், மதுரை

பிரதிநிதிகள் :

வீ. இளஞ்சேரன், சக்குடி
மு. பாண்டியன், களிமங்கலம்
அ. இராதாமணாளன்,
குலமங்களம்
பெ. நல்லதம்பி, சின்னப்பட்டி
ம. க. திரவியம், அப்பன் திருப்பதி
எம். சுப்பிரமணியன்,
அப்பன்திருப்பதி
வீ. இராசு, இலட்சுமிபுரம்
ஆா. வாலகுருசாமி,
சின்னமாங்குளம்
பி. கருப்பண்ணன், குன்னத்தூர்
அழகர்சாமி, புதுத்தாமரைப்பட்டி

பழனி வட்டம்

செயலாளர் :

நா. ரெங்கசாமி, ஒட்டன்சத்திரம்

பிரதிநிதிகள் :

எம். இராமசாமி,
பெரியகலையமபுத்தூர்
அ. பழனிச்சாமி, ஜவ்வாதுபட்டி
பி. காளியப்பன், பெரியகோட்டை
ச. பழனிச்சாமி,
சினனக்கலையம்புத்தூர்
ச. வடிவேல், ஓட்டன்சத்திரம்
சொ. துரையரசன், பழனி
கே. முத்துச்சாமி, வெரியப்பூர்,
ஒடடன்சத்திரம்
கே. சுப்பையன், தேவத்தூர்

நிலக்கோட்டை வட்டம்

செயலாளர் :

கூ. குருசாமி, சோழவந்தான்

பிரதிநிதிகள் :

நீ. அன்புச்செழியன் எம்.பி.,
செக்காபட்டி
வெ. இராமச்சந்திரன், இரும்பாடி
அ. இராமலிங்கம்,
கொண்டையம்பட்டி
பொ. இராமலிங்கம், பள்ளபட்டி
ம. கருப்புச்சாமி,
அய்யன்கோட்டை
து. காத்தான், நிலக்கோட்டை
பி. துரைசாமி, கொடை ரோடு
தோ. ந. ச. மீனாட்சிசுந்தரம்,
பட்டிவீரன்பட்டி
ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ.,
விளாம்பட்டி
பழ. வீரப்பன், நிலக்கோட்டை

திருமங்கலம் வட்டம்

செயலாளர் :

ஆ. கோட்டை, திருமங்கலம்

பிரதிநிதிகள் :

இராமையாதாசன்,
வன்னிவேலம்பட்டி
த. கணபதி, எம். கரையான்பட்டி
ஆ. சிக்கனன், கரிசல்பட்டி
அ. செயராமன், குராயூர்
கே. தங்கராசு, பேரையூர்
எஸ். எஸ். மணி, தேவன்குறிச்சி
மாடசாமி, சிவரக்கோட்டை
எஸ். மாரியப்பன், திருமங்கலம்
கோ. முத்துக்கிருட்டினன்,
எம். சுப்புலாபுரம்
கே. கே. முத்து, பேரையூர்

பெரியகுளம் வட்டம்

செயலாளர் :

சி. கண்ணுச்சாமி,
தென்கரை, பெரியகுளம்

பிரதிநிதிகள் :

அ. கரியமால், கோவிந்த நகரம்
வெ. இராமகிருட்டினன்,
கம்பம் ரோடு, தேனி
மொ. கரும்பையா,
அல்லி நகரம், தேனி
பி. எஸ். மணி,
தென்கரை, பெரியகுளம்
மு. பரமசிவம், டி. வாடிப்பட்டி
எம். எஸ். பால்ராசு, ஆண்டிபட்டி
எம். ஏ. முகமது மீரா,
வடகரை, பெரியகுளம்
மை. க. முகமது மைதீன் எம்.சி.,
வடகரை, பெரியகுளம்
எம். கே. ஆறுமுகம்,
தென்கரை, பெரியகுளம்
மு. பெரியசாமி, தேனி

கொடைக்கானல் வட்டம்

செயலாளர் :

வெ. விசயராகவன்,
பண்ணைக்காடு

பிரதிநிதிகள் :

கே. எம். எம். மேத்தா எம்.எல்.ஏ.,
கொடைக்கானல்
வி. க. செகநாதன், தாண்டிக்குடி
க. வேலுக்குமார், பண்ணைக்காடு
இராம. கோவிந்தராசன்
தாண்டிக்குடி
அ. சின்னசாமி, காடலங்காடு
இராசு, பூலத்தூர்
அப்துல் சலாம், கொடைக்கானல்
எம். எஸ். என். சுப்பையா,
வில்பட்டி

திண்டுக்கல் நகரம்

செயலாளர் :

பொன். சீனிவாசன், பேகம்பூர்,

